## தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

**ID.No. : 13/2021** **சாட்சியம் : MW1**
**Name : Arul Latha**
**Date : 03.01.2024**
**Time : 12:01 p.m. to 12:15 p.m.**

நி.த.சா.1 திருமதி.அருள் லதா என்பவர் இடைக்கால மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேலும் தன் முதல் விசாரணை சாட்சியம் அளிக்க இன்று அனுமதி அளிக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி

கடந்த 01.03.2019 தேதியில் மனுதாரர் ஞானசேகர் என்பவர் நிர்வாகத்திடம் எழுதி கொடுத்த ராஜினாமா கடிதம் அசல் தாக்கல் செய்கிறேன். அது நி.த.சா.ஆ.6. ( இந்த ஆவணத்தில் மனுதாரர் கையொப்பம் இடவில்லை என்றும் அதனால் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்வதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது). 2017 பிப்ரவரி மாதத்தின் மனுதாரரின் சம்பள சிலிப் நகல் நி.த.சா.ஆ.7.

### குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் சார்பில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனாலும் நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் ஒர் இயக்குநராவேன். சாட்சியம் அளிபப்தற்கான அதிகார கடிதம் இல்லாதபோது இந்த வழக்கில் நான் அளிக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதா இல்லை என்றால் சரியல்ல. 2015ம் ஆண்டில் நிறுவனம் துவங்கப்பட்டது. 2014ம் ஆண்டிலேயே கம்பெனி வேறு ஒரு பெயரில் ஆரம்பிக்கப்பட்டபோதே மனுதாரர் பணியில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. 5 வருடங்களுக்கு ஒருமுறை கம்பெனி பெயர் மாற்றம் செய்திருந்தோம் என்றால் சரியல்ல. 2015ம்

ஆண்டில் தான் முதன் முதலில் கம்பெனி துவங்கப்பட்ட பிறகு இதுவரையில் பெயர் மாற்றம் செய்யப்படவில்லை. 2016ம் ஆண்டில் தான் மனுதாரர் பணியில் சேர்ந்தார். நி.த.சா.ஆ.6 கடிதம் மனுதாரரால் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும் அதில் உள்ள கையொப்பம் மனுதாரருடையது அல்ல என்றும் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to
interpreted to the witness and
acknowledged by him to be correct.
Sd/- P. Sivagnanam,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.

//True copy//

P SIVAGNANAM

Presiding Officer, Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2024.01.03 17:00:47 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.